அனுப்புநர்

இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும்
இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி

ந.க.எண். 017233 / எச்3 / 2024 நாள் : 11.11.2024

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் 2025 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு – தேர்வு மையங்கள் பட்டியல் சரிபார்த்தல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பாக.

பார்வை:
1. புதிய தேர்வு மையம் கோரி தங்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.
2. இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 012452 /F3-1/2024, நாள். 06.11.2024.
3. இணைப்புப் பள்ளிகள் மாற்றம் மற்றும் இரத்து செய்யப்பட்ட தேர்வு மையங்கள் தொடர்பாக தங்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

******

பார்வை 1–ல் காணும் தங்களது கருத்துருக்களின் அடிப்படையில், மார்ச் 2025 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வுக்கு, தங்கள் மாவட்டத்தில் புதிய தேர்வு மையமாக / மையங்களாகத் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் விவரங்கள் பார்வை 2–ல் காணும் இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு புதிதாக அனுமதிக்கப்பட்ட மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வுக்கான புதிய தேர்வு மையங்களுடன், கடந்த ஆண்டு வரை தேர்வு மையங்களாக செயல்பட்ட பழைய தேர்வு மையங்கள் மற்றும் மாவட்டத்தில் தேர்வு மைய மாற்றம் கோரி பெறப்பட்ட பள்ளிகள், தேர்வு மையம் இரத்து செய்ய கோரப்பட்ட பள்ளிகளையும் சேர்த்து, மார்ச் 2025 மேல்நிலை இரண்டாமாண்டிற்குரிய **மாவட்ட வாரியான தேர்வுமையங்கள் மற்றும் இணைப்புப் பள்ளிகளின் பட்டியல் மின்னஞ்சல் வழியாக இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.** அப்பட்டியலினை **Print out எடுத்து தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேர்வு மையங்கள் / இணைப்புப் பள்ளிகள் உட்பட அனைத்தும் சரியாக உள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.**

திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அதனை கருப்பு மையினால் மட்டுமே உரிய தேர்வுமையத்திற்கு கீழே குறிப்பிட வேண்டும். திருத்தங்கள் ஏதும் இல்லை எனில் **Correction Nil** என குறிப்பிட்டும் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பக்கங்கள் உட்பட அனைத்து பக்கங்களிலும் முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம் பெற்று, அதனை ஸ்கேன் செய்து இவ்வலுவலகத்திற்கு dgeh3section@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 13 .11.2024 அன்று மாலை 05.00 மணிக்குள் அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பணி, மார்ச் 2025 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்விற்கு அடிப்படையான மிக முக்கியமான பணி என்பதால் இத்திருத்தங்களுக்கு பிறகு எவ்வித மாற்றமும் இல்லாமல், தாங்கள் தனிப்பட்ட கவனத்துடன், இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

மார்ச் 2025–ல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு தங்கள் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வு எழுதவுள்ள எந்தவொரு பள்ளியும் விடுபடாமல் அனைத்துப் பள்ளிகளுக்கும் தேர்வுமையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் மேல்நிலை இரண்டாமாண்டுத் தேர்வு மையங்களாக செயல்படும் அனைத்து பள்ளிகளும் **(Cancellation Centre தவிர)** தேர்வின் சமயம் அங்கீகாரம் பெற்றிருப்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். இதில் தவறு ஏதும் ஏற்படின் தாங்களே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் இணைத்து அனுப்பப்படும் சான்றினை கையொப்பமிட்டு ஸ்கேன் செய்து மின்னஞ்சலில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 13.11.2024 தேதிக்குப் பிறகு பெறப்படும் எந்த ஒரு திருத்தமும் (பள்ளியின் பெயர், இணைப்புப்பள்ளி மாற்றம்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும், தேர்வுமைய பட்டியலில் திருத்தங்கள் ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதற்கு முதன்மைக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–

இயக்குநர்

இணைப்பு :

சான்றிதழ்

நகல் :

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – தகவலுக்காக

(முதன்மைக் கல்வி அலுவலரை தொடர்பு கொண்டு இப்பணியினை குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.)

## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் –2025

## சான்றிதழ்

1. தேர்வு மையப்பட்டியலில் அனைத்து தேர்வு மையங்களும் இடம் பெற்றுள்ளன,

2. தேர்வுமையப் பட்டியலில் தேர்வு மையங்களும், அவற்றின் இணைப்பு பள்ளிகளின் விவரங்களும் விடுதல் இன்றி இடம் பெற்றுள்ளது.

3. தேர்வு மையப்பட்டியலில் மூடப்பட்ட பள்ளிகள் மற்றும் இரத்து செய்யப்பட்ட தேர்வு மையங்கள் நீக்கப்பட்டுள்ளது.

4. தேர்வுமையப் பட்டியலில் அங்கீகாரம் பெற்ற எந்த ஒரு பள்ளியும் விடுபடவில்லை. அங்கீகாரம் பெறாத எந்தவொரு பள்ளியும் இடம்பெறவில்லை

5. ஒவ்வொரு தேர்வுமையத்திலும் தேர்வு நடத்துவதற்கு போதுமான தேர்வறைகள், போதுமான தளவாடங்கள் மற்றும் இருக்கை வசதிகள் உள்ளன என சான்றளிக்கிறேன்.

முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம்

(அலுவலக முத்திரையுடன்)